வகுப்பு : தமிழ் இலக்கியம்
இரண்டாம் ஆண்டு
பாடம் : படைப்பிலக்கியம்
பாட எண் : 16AACTA4

# புதுக்கவிதை

தமிழ் இலக்கியம் எல்லாக் காலங்களிலும் ஒரே படித்தான தாக இருந்ததில்லை. உலகத்து ஒழுகலாறுகள் மாறமாறச் சூழ் நிலைக் கேற்ப, இலக்கியங்களும் மாற்றமடைதல் இயல்பு. காலத்தை ஒட்டிய இம்மாறுதல் இல்லாமல் போனல், இலக்கியமும், அவ் விலக்கியங்களை யுடைய மொழியும் காலப்போக்கில் வழக்கிறந்து விடும். காலத்துக் கேற்ற மாறுதல்களை உருவாக்கிக் கொள்ளாமல் பத்தாம் பசலித்தன மான பழமைப் போக்கை மேற்கொண்டதால் தான் சமற்கிருத மொழி இன்று வழக்கில் இல்லாமல் மறைந்துவிட்டது. ஆனால் தமிழ் மொழி காலந்தோறும் உரிய உருப்படியான மாறுதல்களைக் கொண்ட இலக் கியங்களைத் தோற்றுவித்து வருகிறது. தமிழ் இலக்கணங்கள் இத்தகைய தொரு நெகிழ்ச்சிக்கு எப்போதுமே இடம்கொடுத்து வருகின்றன. தொல்காப்பியம்,

'விருந்து தானே, புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' எனப் புதுவகை இலக்கியங்கட்கு விருந்து எனப்பெயர் சூட்டுகிறது.

**கடிசொல் இல்லை காலத்துப் படினே**

என்று கூறுவது இலக்கியத்திற்கும் பொருந்தும். நன்னூலார்

**பழையன கழிதலும் புதியன புகுதலும்**
**வழுவல கால வகையி னானே**

எனக் கூறிப் புதுமை தோன்றுவதை வரவேற்கிறார்.

Scanned with CamS

## வரையறைகள்

"சொற்சிக்கனம், பேச்சுப்பாங்கு, பேச்சமைதி, புதுமைப் படிமப் பயன்பாடு (~~பிரயோகம்~~), தற்காலச் சொல்லாட்சி, உணர்ச்சிப் பாங்கு, தத்துவ நோக்கு, ஒலிநய அழுத்தம், உடனிகழ்கால உணர்வு, இன்றைய இக்கட்டான நிலை, இவற்றைத் தன் உள்ளடக்கத்துக்கும் உருவத் திற்கும் பொருளாகவும் சாதனங்களாகவும் கொண்டு புதுக்குரலில் ஒலிப்பதுதான் இன்றைய புதுக்கவிதை" எனப் புதுக்கவிதைகளுக்கு வரையறை தருகிறார் திரு. கி. சு. செல்லப்பா. முதலில் வசன கவிதை

1912 இல் புதுக்கவிதை முன்னோடியான எஸ்ராபவுண்ட் அவர்களும் டின்டன் என்பவரும் சேர்ந்து வெளியிட்ட புதுக்கவிதைக் கோட்பாடு வருமாறு:

1. எதையும் நேர்முகமாய்க் கூற வேண்டும். பொருளின் ஆன்மாவை உடனே தேடவேண்டும்.

2. கவிதையின் பொருட் பயன்பாட்டுக்குப் பயன்படாத எச்சொல்லையும் புகுத்தக் கூடாது. சொல் ஆரவாரமோ, தேவையற்ற அணிகளோ இடம்பெறக்கூடாது.

3. தட்டுப்பாடும் தடையும் இல்லாத ஓசை ஒழுங்கைக் கையாள வேண்டுமே தவிர நூல் பிடித்தாற்போலக் கணக்காக ஓசை அமைய வேண்டும் என வற்புறுத்தக் கூடாது.

Scanned with CamS

இக்கோட்பாடு சொல்லின் பொருளை மையப்படுத்தும் தன்மையது. தேவையற்ற சொற்களோ, உருவத்தை மழுங்கச் செய்யும் சொற்களோ, நுண்பொருள் உவமைகளோ இடம் பெறக் கூடா என்பது எஸ்ரா பௌண்டின் எண்ணம். சுருங்கச் சொல்லின், செவ்விய சீரிய கூரிய தீஞ்சொல் என்று கம்பர் கூறுகிறாரே அத்தகைய சொற்களால் ஆனதாகப் புதுக்கவிதை இலங்க வேண்டும் என்பது அன்னார் எதிர்பார்ப்பு. உருவம் மட்டுமின்றி உள்ளடக்கமும் வரையறுக்கப் பட்டது. இது பற்றிச் சக்திக்கனல் பின் வருமாறு கூறுகிறார். 1, இன்றைய சமூக வாழ்க்கைச் சிக்கலைக் காட்ட வேண்டும். 2. சொற்களையும் சிந்தனைகளையும் மழுப்பாமல் உடைத்துத் புதுவளத்துடன் கையாள வேண்டும். 3. சிடுக்கு சிடுக்காகக் காட்ட வேண்டும். சிடுக்கில்லை என்று மூடி மறைக்கக் கூடாது.

Scanned with CamS

*உணர்த்தும்முறை*

தேவையான சொற்களை மட்டும் கொண்டு உணர்த்தல், படிமங்களை அமைத்து உணர்த்தல் பொருளுக்கேற்ப எழுத்துக்களை மாற்றி அமைத்து உணர்த்தல், அங்கதச் சுவை மிளிர உணர்த்தல், இலக்கிய மேற்கோளும் பழங்கதை மேற்கோளும் உள்ளாக உறையச் செய்து புதிர்க் கவிதை நிலையில் உணர்த்தல் முதலிய பல்வேறு உணர்த்துமுறைகள் புதுக்கவிதைகளில் போற்றப்படும்.

Scanned with CamS

அடிப்படையிலேயே புதுக்கவிதை தோன்றியது என்பர், அறிஞர். செய்யுள் நடை செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் நீதி, மருத்துவம், சோதிடம் முதலிய அறிவியல் கருத்துக்களைக் கூட உரைநடையில் கூறாமல் செய்யுளில் கூறினர். அச்சுக் கூடங்கள் வளர்ச்சி பெற்று உரைநடை மேலாண்மை செலுத்தும் இக்காலத்தில் கவிதை வடிவம் கூடச் செய்யுளிலிருந்து உரைநடைக்கு மாறிவிட்டது. செய்யுளைக் காட்டிலும் உரைநடையே மக்கள் தொடர்புகொள்ள எளிமையானது. மக்கள் யாரும் செய்யுளில் பேசுவதில்லை. உரைநடையிலேயே பேசுகின்றனர். எனவே மக்கள் பேச்சு மொழிக்கு அணுக்கமானதொரு நடையே - அதாவது உரைநடை இயல்புகொண்ட புதுக்கவிதை நடையே பொருத்தமானதாகிறது. முன்பு ஓலைச் சுவடிகள் குறைந்த அளவே கிடைக்கும். எனவே கூறுவதைக் கேட்பதும், மனப்பாடம் செய்வதுமே கல்வியாக இருந்தது. மனனம் செய்வதற்கு எளிமையானதும், மனனம் செய்து நெஞ்சில் நிறுத்திக் கொள்வதற்கும், எடுத்துக்கூறுங்கால் இசைபடக் கூறுவதற்கும் ஏற்றதொரு கருவியாகச் செய்யுள் வடிவம் மேற்கொள்ளப்பட்டது. இப்போது எல்லோர்க்கும் எளிமையாக அச்சு நூல்கள் கிடைப்பதால், கேட்டலும் மனப் பாடம் செய்தலும் குறைந்து வருகின்றன. நூல்களை வேண்டும் போது புரட்டிப் பார்த்துக் கொள்ளலாம். வாய்விட்டுப் படிப்பதை விட மனத்திற்குள் படிப்பதும் எண்ணிப் பார்ப்பதும் இன்றைய நடை முறையாகி விட்டன. இத்தகைய சூழலுக்கு இசைத்தன்மை வாய்ந்த செய்யுள் வடிவம் தேவையில்லை. நேருக்கு நேராகச் செறிவாக உணர்த்தும் உரைநடை வடிவிலான புதுக்கவிதையே வேண்டற்பாலது. ஒரு காலத்தில் மரபு கவிதைகள் [illegible] பின்னர்த் தொடை

## புதுக்கவிதை உருவம்

புதுக்கவிதைகளின் உருவம் வெளிப்படையாகத் தெரியாது என்பதை, "சிவனால் எரிக்கப்பட்ட மன்மதன் ரதி தேவியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவானாம். அதுபோல் இலக்கணத் தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக்கவிதையின் உருவமும் உண்மையான இலக்கிய ரதிதேவிகளுக்கே தெரியக்கூடும்" என்று கவிஞர் மீரா (அன்னம் ஆண்டுமலர் 1976) வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார். புதுக்கவிதைகளுக்கான வடிவங்கள் நிறைய உள. ஒரு கவிஞர் அவருக்கென்று ஒரு வடிவத்தைப் பின்பற்றுகிறார் எனலாம். அவரவர் பாணியே ஒரு வகையில் வடிவமாகிறது. சிலர் படிமங்களைப் (Images) படைப்பதையே வடிவமாகக் கொள்கின்றனர். சிலர் குறியீடுகளைப் (Symbols) படைப்பதையே வடிவமாகக் கொள்கின்றனர். சிலர் அங்கதத்தையே (Satire) வடிவமாகக் கொள்கின்றனர். இப்படி அமைந்திருக்கிற உருவ

Scanned with CamS

## 2 மதிப்பெண்

1. படைப்பிலக்கியம் என்றால் என்ன?
   பிறவற்றைப் பார்த்து படியெடுக்கப்படாத பார்த்து எழுதப்படாத இலக்கியங்கள் படைப்பிலக்கியம் எனப்படும்
2. முற்காலத்தில் எவ்வகையில் இலக்கியங்கள் இருந்தன?
   முற்காலத்தில் செய்யுளுக்கு உரை தவிர அனைத்துமே செய்யுளில் தான் இருந்தன.
3. படிமம் என்றால் என்ன?
   படிமம் என்பது சொல்ல வருகிற கருத்தை அல்லது ஒன்றை அப்படியே மனக்கண்ணில் காணுமாறு சொல்லின் உதவியால் காட்சிப்படுத்துவதாகும்.
4. குறியீட்டு கவிதை ஒன்று எழுதுக.
   ”புறத்திணை சுயம்வர மண்டபத்தில்
   போலி நளன்களின் கூட்டம்
   கையில் மாலையுடன்
   குருட்டுத் தமயந்தி”
5. எதுகை என்றால் என்ன?
   செய்யுளில் அடிகள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தால் அது எதுகை எனப்படும்.
6. மரபுக்கவிதை என்றால் என்ன?
   கவிதைகளில் இலக்கணக் கட்டுப்பாடு உடையவை மரபுக்கவிதை எனப்படும்.
7. கவிதையின் உயிர்நாடி எது?
   செறிவு கவிதையின் உயிர்நாடியாகும்.
8. அசைக்கு (எ.டு.) இரண்டு கூறுக.
   நேரசை – கல், கால்
   நிரையசை – நிறம், கிரால்.
9. ஆசிரியப்பா, வெண்பாவிற்குரிய ஓசை எது?
   அகவலோசை – ஆசிரியப்பா
   செப்பலோசை – வெண்பா
10. கதை, கவிதைக்குரிய வேறுபாடு யாது?
    வசனத்தில் நிகழ்த்துவது கதை
    வசனத்தில் உணர்த்துவது கவிதை
11. ஒரே ஒரு சொல்லை அடியாக கொண்ட கவிதை ஒன்றை எழுதுக.
    ஏழை
    வீட்டுச்
    சுவரும்
    சிரிக்கும்
    ஒட்டுக்
    காலத்தில்
12. சிறுகதைக்கரு என்றால் என்ன?
    சிறுகதைக்கருத்து கதைக்கரு எனப்படும்.
13. சிறுகதை எவ்வாறு அமைத்தல் வேண்டும்?
    சிறுகதை குதிரை ஓட்டம் போல் விரைவாக இருத்தல் வேண்டும். அரைமணி நேரம் முதல் ஒரு மணி நேரத்திற்குள்ளாக படிக்குமாறு இருத்தல் வேண்டும்
14. சிறுகதையின் 5 படிநிலைகள் யாவை?
    தொடக்கம்
    வளர்ச்சி
    உச்சநிலை

வீழ்ச்சி
முடிவு
இவை ஐந்தும் சிறுகதையின் படிநிலைகளாகும்.

15. இலக்கிய வடிவங்களில் காலத்தால் பழமையானது எது?
நாடக இலக்கியம் இலக்கிய வடிவங்களில் காலத்தால் பழமையானதாகும்.
16. ஓரங்க நாடகம் எப்போது வளர்ச்சி பெற்றது?
வானொலியின் வருகைக்குப் பின்னால் ஓரங்க நாடகம் வளர்ச்சி பெற்றது.
17. நாடகத்தின் பாகுபாடுகள் யாவை?
படித்தற்குரிய நாடகம்
நடித்தற்குரிய நாடகம்
படிப்பதற்கும், நடிப்பதற்கும் உரிய நாடகம்.
18. ஒலிகளை மட்டும் நம்பி நடத்தப்படும் நாடகங்கள் எவை?
வானொலி நாடகங்கள்
19. வானொலி நாடகத்தின் உயிர் எது?
வசனமே வானொலி நாடகத்தின் உயிராகும்
20. அண்மையில் தொலைக்காட்சி மூலமாக நடத்தப்படும் நாடகங்கள் எவை?
ஓரங்க நாடகங்கள்
21. இக்காலத்தில் ஓரங்க நாடகங்கள் எவ்வாறு வளர்க்கப்படுகின்றன?
பத்திரிக்கைகள், வானொளி, தொலைக்காட்சி, பரிசோதனை நாடக இயக்கங்கள் மூலமாக இக்காலத்தில் ஓரங்க நாடகங்கள் வளர்க்கப்படுகின்றன.
22. புதுக் கவிதை வடிவம் தமிழில் யாரிடம் முதன் முதலில் தோன்றியது?
பாரதியார்
23. மணிக்கொடிக் காலம் - குறிப்பு வரைக
புதுக்கவிதை வளர்த்து வந்த பாதையினை மூன்று கட்டங்களாகப் பிரிப்பார் அவை,
    மணிக்கொடிக்காலம் (1930-1945)
    எழுத்துக்காலம் (1950-1970)
    வானம் பாடிக் காலம் (1971க்குப் பின்)
24. ஹைக்கூ கவிதைகள் என்றால் என்ன?
சப்பானிய மொழியில் மூன்றடியில் அமைத்து கவிதைகள் ஹைக்கூ கவிதைகள் எனப்படும்
25. தமிழில் ஹைக்கூ கவிதை ஒன்றை எழுதுக.
அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங் குழல்

ஐந்த மதிப்பெண்

1. கல்வி என்னும் தலைப்பில் கட்டுரை வரைக
2. படைப்பிலக்கியத்தின் பயன்கள் யாவை?
3. “இயற்கையை காத்த செயற்கை வைரஸ்” எனும் தலைப்பில் 12 வரிகளில் கவிதை எழுதுக
4. மழை என்னும் தலைப்பில் மரபுக்கவிதை எழுதுக
5. மரபுக் கவிதையின் அமைப்பு பற்றி எழுதுக
6. மரபுக் கவிதை ஒன்றை எழுதுக
7. ஆசை எனும் தலைப்பில் ஒரு பக்க கதை எழுதுக
8. சட்டங்கள் எனும் தலைப்பில் புதுக்கவிதை எழுதுக.
9. பின்னோக்கு உத்தி பற்றி எழுதுக
10. அறிவியல் சாதனங்களின் பயன்கள் பற்றி கட்டுரை எழுதுக.

10 மதிப்பெண்

1. காலம் அல்லது இயற்கை எனும் தலைப்பில் 20 வரிகளுக்குள் புதுக்கவிதை எழுதுக.
2. “அம்மா” எனும் தலைப்பில் சிறுகதை எழுதுக.
3. உங்கள் ஊரில் நடைபெற்ற திருவிழாற்கு நேர்முக வர்ணனை செய்து கட்டுரை வரைக.
4. உம் கல்லூரி விளையாட்டு விழாவிற்கு நேர்முக வர்ணனை செய்தும் கட்டுரை எழுதுக.
5. “உலகை வென்ற வைரஸ்” என்னும் தலைப்பில் கட்டுரை வரைக
6. “கூர்படுத்திய கோரானா” எனும் தலைப்பில் ஓரங்க நாடகம் எழுதுக
7. “உன்னை உணரவைத்த ஊடரங்கு” என்னும் தலைப்பில் 20 வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதுக.
8. “காடு வளர்த்து நாடுகாப்போம்” எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
9. “புதுமைகள்” எனும் தலைப்பில் ஓரங்க நாடகம் எழுதுக.
10. “எண்ணத்தின் வண்ணம்” என்னும் தலைப்பில் மரபுக் கவிதை எழுதுக.

## புதுக்கவிதைகள்
## நம் வாழ்க்கை காலம்

“அது ஒரு அழகிய காலம்” என்று
சொல்லுமளவு ஏதேனும்....
ஒரு நிகழ்வு எல்லோர் வாழ்விலும்
இருக்கத்தான் செய்கிறது....!!

## நட்பு

தொப்புள் கொடி பிரித்துவிட்டால்
        தாயை சேய் மறந்துவிடுமோ?
மாதங்கள் பார்க்கா விடினும்
        நாம் கொண்ட நட்புதான் மாறிவிடுமோ?

## மழை

இந்திய வரைபடமோ பல புள்ளி
அதில் ஒருபுள்ளி தான் கிராமம்
சில காலமாய் மனிதன் குடிக்கவும்
மான் குடிக்கபும் நீர் இல்லை
பச்சை மரம் பட்டுப் போனது
மனித மனம் விட்டுப் போனது
விவசாயின் கண்ணீர் மழை
இந்த மண்ணில் ஓடுகிறது
மண்ணில் ஓடுவது கண்ணீர் அல்ல
விவசாயின் குரல் கேட்கவில்லையா
கருகும் நிலத்தின் நிலை புரியவில்லையா
உப்புநீரால் உருகும் மனிதனை காணவில்லையா
உன்னைத் தேடா இடம் தேடி அலையும்
மனிதனுக்கு மனம் மகிழ மழையே மலையிறங்கிவா
ஒரு துளியாய் விழுந்து
பல ஓடையாய் நலிந்து
குறு ஆறாய் மெலிந்து
சிறு பெருங்கடலாய் எழுந்து
கரு மேகமாய்ச் சிதைந்து
பின் துளியாய் வரும்
மழைத் துளியே....

## ஆசிரியர்

அறியாமை இருள் நீக்கி
அறவொளி கொடுக்கும்
ஞாயிறு திங்கள்....!!

எட்டுக் கல்வியோடு
நல்லொழுக்கம் போதிக்கும்
ஞானி நீங்கள்....!!
வருங்கால சமுதாயத் தூண்களை
பாங்காய்ச் செதுக்கும்
சிற்பி நீங்கள்....!!
மாணவர் மனமெனும் களர்நிலத்தை
பண்படுத்தி விளைநிலமாக்கும்
உழவன் நீங்கள்....!!
நெறிதவறும் மாணாக்கர்க்கு
அறிவுரை புகட்டி ஆதரிக்கும்
ரட்சகன் நீங்கள்....!!
சாரதியாய் வழிகாட்டி ஒளிகாட்டும்
கலங்கரை விளக்கம் நீங்கள்....!!
அறிவுச் செல்வங்களை
அகில அரங்கில் நிலை நாட்டும்
போதி விருட்சம் நீங்கள்....!!
கல்விக் கூட கோவில்களின்
கருவறைத் தெய்வங்களே....
கரம் கூப்பி சிரம் தாழ்த்தி
தொழுகின்றோம்....!!-நும்
பணி சிறக்கட்டும்....
வாழிய.... பல்லாண்டு.... பல்லாண்டு...!!!